# பாட்டாளி சிந்தனை

Volume 32 No 10

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

S U C I (Communist)

August 2022 தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5


## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்
# தோழர் சிப்தாஸ் கோஷின்
## பிறந்த நூற்றாண்டு துவக்கவிழா (05.08.1923–05.08.2023)







டில்லியில் 05.08.2022 அன்று: 1. தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச் செயலாளர், எஸ்.யு.சி.ஐ (கம்யூனிஸ்ட்) செங்கொடியேற்றுகிறார். 2. புகைப்பட, மேற்கோள் கண்காட்சியை தோழர் பிரவாஸ் கோஷ் துவக்கி வைக்கிறார். 3. பொலிட்பிரோ உறுப்பினர் தோழர் அசித் பட்டாச்சார்யா சிறப்புரையாற்றுகிறார்

# பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு தோழர் பிரவாஸ் கோஷ் அறைகூவல்

*அன்பார்ந்த தோழர்களே, நண்பர்களே,*

*இச் சகாப்தத்தின் மாபெரும் மார்க்சிய சிந்தனையாளரும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளருமாகிய தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்ததின நூற்றாண்டை அனுஷ்டிக்க வேண்டுமென தோழர்களுக்கு வேண்டுகோள் விடுக்கத் தேவையேயில்லை என்பதை நான் அறிவேன், அதை உறுதியாக நம்புகிறேன். ஏனெனில், தோழர்களும் ஆதரவாளர்களும் அவரது மாணாக்கர்கள் என்ற முறையில் உணர்ச்சிமிகு அர்ப்பணிப்புடன் அவருக்கு உரிய முறையில் அஞ்சலி செலுத்த தன்னெழுச்சியாகத் தயாராகிவிட்டனர்.*

*ஒடுக்கப்படும் மக்கள் மீது கொண்டிருந்த எல்லையற்ற அன்பினால் தோழர் சிப்தாஸ் கோஷ் நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டத்தை, வரலாற்றில் அரிதாகக் காணப்பட்ட அவரது வாழ்வா, சாவா எனும் போராட்டத்தை, இந்திய மண்ணில் புரட்சிகரத் தத்துவமாகிய மார்க்சிசத்தை நமது மண்ணிற்கேற்ப செழுமைப்படுத்தும் கனவுடன் உறுதியான நம்பிக்கையுடன், மனந்தளராமல், வெல்லற்கரிய உத்வேகத்துடன், அசைக்கமுடியா துணிவுடன் ஆழ்ந்த விடாப்பிடியுடன், நிதானத்துடன் அவர் மேற்கொண்ட மிகக்கடினமான போராட்டத்தை, அதன் மூலம் முதலாளித்துவச் சுரண்டல் நுகத்தடியிலிருந்து நம் நாட்டின் ஒடுக்கப்படும் மக்களை விடுதலை அடையச் செய்வதற்காக, அதே நேரம் சர்வதேச கம்யூனிச இயக்கத்தை பலப்படுத்துவதற்காக அவர் நடத்திய போராட்டத்தை மீண்டும் நினைவுகூர்வதற்கான தருணம் இது.*

தொடர்ச்சி 2ம் பக்கம்

# மக்கள் விரோத மின்சார கட்டண உயர்வு பரிந்துரையை வாபஸ் வாங்கு

*கடந்த இரண்டு ஆண்டுகளாக கரோனா பெரும் தொற்றினால் சொல்லொண்ணா துன்பத்தில் உழன்று வரும் மக்கள், வேலை இழப்பு, விலைவாசி உயர்வு, பெட்ரோல் டீசல் கேஸ் விலை உயர்வுகள், ஜிஎஸ்டி வரி உயர்வுகள், சொத்துவரி உயர்வு, கல்வி கட்டணம் உயர்வு, பணவீக்கம் உள்ளிட்ட பல்வேறு பொருளாதாரத் தாக்குதல்களால் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மக்களை மீட்டெடுக்கப் போவதாகக் கூறி புதிதாக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த திமுக அரசாங்கம் பால், பெட்ரோல் மீதான விலையை சிறிது குறைத்துவிட்டு சிறிது நாட்களிலேயே சொத்து வரியை மிகக் கடுமையாக உயர்த்தியதோடு, மின் கட்டண உயர்வுகளையும் மக்கள் தலையில் அடுக்கடுக்காக சுமைகளையும் ஏற்றி கொண்டிருக்கிறார்கள்.*

*கடந்த ஜூலை 18, 2022 அன்று, மின்சாரத்துறை அமைச்சர், தமிழகத்தில் மின்சார கட்டணம் உயர்த்தப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மின்சாரத்துறை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம், இதற்கான பரிந்துரையை அளித்துள்ளது. மக்கள் விரோத மின்சார சட்டம் 2003ல் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது அந்தச் சட்டம். சட்டம் 2020 என்கின்ற பெயரில் நாடாளுமன்றத்தில் முன்மொழியப் பட்டுள்ளது. பொதுமக்களுக்கு மின்சாரம் அத்தியாவசிய நுகர்வுப் பொருள் என்பது அனைவரும் அறிந்ததே. மேற்கூறிய இரண்டு சட்டங்களும் மின்சாரத்தை முழுக்க முழுக்க சந்தைப் பொருளாக்கும் அடிப்படையிலும் தனியார் மயமாக்கல் மூலம் அதிக லாபம் ஈட்டும் தொழிலாக மாற்றும் தீவிர முயற்சியை குறிக்கோளாகவும் கொண்டுள்ளது. மின்சார உற்பத்தியாளர், மின்சார வர்த்தகம் புரிவோர், மின்சார உபயோகிப்பாளர் என சந்தைப் படுத்தப்படும் பொருளாதாரச் சிக்கல்கள் மக்கள் மீது திணிக்கப்படும் கொடுமை தொடர்ந்து நிறைவேறி வருகிறது. இந்த மக்கள் விரோத மசோதாவை எதிர்த்து நாட்டின் அனைத்து விவசாய சங்கங்களும், மின்சார நுகர்வோர் சங்கங்களும், பிற பகுதி மக்களும் போராடிக் கொண்டு உள்ளனர்.*

தொடர்ச்சி 7ம் பக்கம்

## தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டை . . .

# தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனையை ஒட்டுமொத்த மக்கள் மத்தியில் முன்னிறுத்துவோம்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

இவை அனைத்தையும் நினைவு கூர்வது என்பதன் பொருள், அவர் விரும்பியது போல, நம் மனசாட்சியை மீண்டும் கேட்டுக்கொள்வது மற்றும் உண்மையான புரட்சிகரப் போராளிகளாக நம்மை வலுப்படுத்திக்கொள்வதாகும். அதை அடைவதற்கு என்ன தேவையாக உள்ளது என்றால், **1.** அவரது புரட்சிகர போதனைகளை கற்கவும், மீண்டும் மீண்டும் கற்றுக் கிரகித்துக்கொள்ளவும், அதை நம் வாழ்வில் பிரோயோகிக்கவும் ஒரு தீவிர, தொடர்ச்சியான முயற்சியை எடுப்பது, **2.** ஒடுக்கப்படும் மக்களை அரசியல்மயப்படுத்தி, ஒன்றுபடுத்தி, அவர்களை வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களில் ஈடுபடுத்துவதற்காகவும் ஆழ்ந்த உணர்பூர்வமாக ஒன்று கலப்பதற்கும், அவர்களுடன் வாழ்வதற்கும், அவர்களது வாழ்க்கையை ஆய்வு செய்யவும், அவர்களது துன்பங்களை உணரவும் தடைகளாக நம்மிடம் உள்ள குட்டி முதலாளித்துவ பாரபட்சங்களிலிருந்து வெளிவருவதற்கான ஒரு தீர்மானகரமான போராட்டத்தை முன்னெடுப்பது, **3.** நமது சித்தாந்த மற்றும் ஸ்தாபனரீதியிலான தரத்தை உயர்த்திக்கொள்ள ஒரு தொடர்ச்சியான, உண்மையான செயலூக்கமான முயற்சியை எடுப்பது, **4.** தயக்கமேதுமற்ற, வெளிப்படையான சுய விமர்சனத்தை நடத்துவதற்கு மற்றும் பிறரது விமர்சனத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வதற்குத் தேவையாக உள்ள நம்மிடம் இருக்கும் முதலாளித்துவ தீய குணங்கள் பழக்க வழக்கங்கள் அனைத்தையும் விட்டொழிப்பதற் கான ஒரு தீர்மானகரமான, ஓய்வொழி வற்ற போராட்டத்தை நடத்துவது, **5.** தலைமை யிடமிருந்து உத்தரவுகளுக்குக் காத்திராமல், எந்த வேலையையும் செய்வதற்கான முன்முயற்சி எடுக்கும் பழக்கத்தை கைவரப்பெறுவதற்கான, விடாப்பிடியான போராட்டத்தை நடத்துவது, **6.** அனைவரிடமிருந்தும் கற்றுக்கொள்ளும், ஒரு சாமானிய மனிதனிடமிருந்தும்கூட கற்றுக் கொள்ளும் சூட்சம அறிவைப் பெற்றிருப்பது, **7.** வெற்றிபெறுகையில் போராட்டத்திலிருந்து காணாமல் போய்விடுவது, திருப்தியுடன் வெறுமனே இருப்பது மற்றும் தோல்வி யடைகையில் மனமுடைந்துபோவது என்பதற்கு ஒருவர் பலியாகிவிடக்கூடாது. **8.** அனைத்து இடர்பாடுகளையும் கடந்து புதிய பகுதிகளைக் கண்டறிவதற்கான விடா முன்முயற்சி வேண்டும், **9.** மக்கள் ஆதரவு அணுகுமுறையை, உயர்ந்த ஒழுக்க நெறியை பிரதிபலிப்பதன் வாயிலாக, வெகுஜனங்களின் நம்பிக்கையை பெறுவதற்காக குடியிருப்புப் பகுதிகளில் மற்றும் வேலை யிடங்களில் தங்கி வெகுஜன வாழ்க்கையை நடத்திடுவது, அதன் மூலம் அவர்களில் ஒருவராகி உண்மையில் அவர்களின் சொந்தத் தலைவராக ஆவது.

மேலே சொன்ன சில விஷயங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் நம் மாபெரும் தலைவரது மதிப்புமிக்க மாணாக்கர்களின் தரத்தை நோக்கி, நம்மால் சற்று முன்னேற முடியும். நம் முன்முயற்சியை அதிகரித்திட, மேலே சொன்ன தரத்தை அடையப் பெறுவதற்கு உகந்த வகையில் அனைத்தையும் தழுவிய ஓய்வொழிவற்ற போராட்டத்தில் நம்மை நாமே ஈடுபடுத்திக் கொள்வதற்காக புரட்சியாளர்கள் என்ற முறையில் இத்தருணத்தில் நிச்சயம் உறுதியேற்போம்.

மத இயக்கங்கள், மறுமலர்ச்சி இயக்கங்கள், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகள், சுதந்திரப் போராட்டங்கள், ரஷ்ய மற்றும் சீனப் பாட்டாளிவர்க்கப் புரட்சிகள் போல, வரலாற்றில் நாம் கண்ட முந்தைய மாபெரும் இயக்கங்கள் யாவும் சாமானிய மக்களை வெகுண்டெழ வைக்க, உத்வேகப்படுத்த, கல்வி புகட்ட மற்றும் அவர்களை ஒருங்கு திரட்ட அவர்களின் சொந்தத் தலைவர்களை உருவாக்கி முன்னிறுத்தி யதை நாம் அறிவோம். அப்படி இல்லாமல் எந்த ஒரு புரட்சிகர இயக்கமும் முன்னேறிச் செல்ல முடியாது. ஆனால், துவக்க காலத்தில், அன்றைய காலகட்டங்களில் அஞ்சிப் போயிருந்த ஆளும் வர்க்கமானது, புரட்சிகரக் கருத்துக்களையும் அதன் தலைவர்களையும் மக்களிடமிருந்து மறைத்திட சூழ்ச்சி செய்தது. இம் முயற்சி தோற்றதால், புரட்சிகரக் கருத்துக்கள் மற்றும் தலைவர்களது பெயர்கள் பிரபலமானதால், ஆளும் வர்க்கம் கடும் வன்மத்துடன் புரட்சிகரத் தலைவர்களை வேட்டையாடித் துன்புறுத்தியது, மக்களை திசைதிருப்ப பொய்கள், அவதூறுகளைக் கட்டவிழ்த்துவிட்டு நேர்மையற்ற பிரச்சாரம் மேற்கொண்டு புரட்சிகரக் கருத்துக்களை சிறுமைப்படுத்தியது. ஆனால் அவையனைத்தும் வீணானது. இப்போது தோழர் சிப்தாஸ் கோஷ் மற்றும் அவரது புரட்சிகரக் கருத்துக்கள் விஷயத்திலும் அதே போன்றுதான் நடக்கின்றது.

ஏற்கனவே தோழர் சிப்தாஸ் கோஷ் ஒரு மாபெரும் பாட்டாளிவர்க்க புரட்சிகரத் தலைவராக உருவாகிவிட்டார். கட்சித் தோழர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் மற்றும் பின்பற்றும் வெகுஜனங்களாகிய நாம் அவரை ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆனால் பரந்துபட்ட மக்கள் மத்தியில் அவர் இன்னும் அறியப்பட வில்லை. இக்கட்டத்தில் ஆளும் வர்க்கமானது இப் பெயரைக்கண்டு அஞ்சுவதால், அது வேண்டுமென்றே அவரை அலட்சியப்படுத்துகிறது. அமைதி காக்கின்றது, அவரது பெயரை, அவரது படிப்பினைகளை தவிர்க்கவும் அழித்தொழிக்கவும் முயலுகிறது. பாடுபடும் மக்கள் சரியான புரட்சிகர போராட்டப்பாதையை அறிந்துகொள்ளாதவாறு பார்த்துக்கொள்கிறது.

தற்போது தேசிய அளவிலும் சர்வதேசிய அளவிலும் என்றுமில்லா தீவிர நெருக்கடியை மக்கள் சந்தித்துக்கொண்டிருக்கின்றனர். அழுகிய முதலாளித்துவத்தின் இறுதிக்கட்டம் இது. வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் தீவிரமாக்கிக் கொண்டேயிருக்கும் துயரங்கள் மக்களைச் சூழ்ந்திருக்கின்றன. உண்மையில் நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கும் முதலாளித் துவம், மூச்சுத்திணறிக் கொண்டிருக்கிறது. அது தானாகவே சாகாது, எந்தச் சமூக அமைப்பும் அப்படிச் சாகாது. சுரண்டப்படும் வர்க்கத்தின் விழிப்புணர்வு அதன் சாவை துரிதப்படுத்த வேண்டிய தேவை உள்ளது, அதன் சவக்குழியைத் தோண்ட வேண்டியுள்ளது.

சுரண்டப்படும் மக்களின் அடக்கி வைக்கப்பட்ட மனக்குறைகள் இங்குமங்கும் அவ்வப்போது வெடித்துக் கிளம்புவதை தொடர்ந்து நாம் பார்க்கிறோம். மாதக்கணக்கில் அது தொடர்வதையும் நாம் பார்க்கிறோம். அலைஅலையாகத் தொடரும் போராட்டங்கள் வருகின்றன, பின் மறைந்துவிடுகின்றன. ஆனால் அவற்றில் புரட்சிகரத் தலைவர் என எவரும் இல்லை, அவர்களை வழிநடத்த புரட்சிகரச் சித்தாந்தமோ அல்லது கட்சியோ இல்லை. அனைத்து இடங்களிலும் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர், அவர்கள் போராட விரும்புகின்றனர், அவர்கள் மாற்றத்துக்காக ஏங்கி நிற்கின்றனர். ஆனால் மக்களால் அறியப்பட்ட பாட்டாளிவர்க்கத் தலைமையை உருவாக்குவது தான் இத்தருணத்தில் அவசரத் தேவையாக



**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ்**

உள்ளது. ஏற்கனவே நாம் விவரித்துபோல, பாட்டாளிவர்க்க புரட்சிகரத் தலைவரான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களை, அவரது போதனைகளை, நம் கட்சியை, சுரண்டப்படும் ஒட்டுமொத்த மக்கள் மத்தியில் நம்மால் இன்னும் முன்னிறுத்த முடியவில்லை.

ஒரு மாபெரும் மார்க்சிய சிந்தனையாளராக, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தலைவராக தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களை முதலில் தேசிய அளவிலும் பின்னர் சர்வதேச அளவிலும் முன்னிறுத்த, மார்க்சிசம் லெனினிச கருவூலத்தை செழுமைப்படுத்திய அவரது மதிப்பு வாய்ந்த விவாதங்கள் அடங்கிய நூல்களை கொண்டு செல்வது இப்போதைய அவசரத் தேவையாக, இன்றியமையாக் கடமையாக உள்ளது. இத்தகைய நோக்கங்களுடன் குறிப்பாக இத்தருணத்தில், தோழர்கள் நாடு முழுவதும் குறைந்தது முக்கிய சிறு குறு நகரங்களில் அத்தகைய நூல்களை மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், அறிவுஜீவிகள் மத்தியில் கொண்டு சென்று கட்சியை, வர்க்க மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களை வளர்த் தெடுப்பதற்கான புதிய பகுதிகளைக் கண்டறிய வேண்டும். அதே நேரத்தில், நம்மால் முடிந்தவரை சர்வதேச அளவில் நம் கருத்துக்களை ஆதரிக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிகள், அமைப்புகளின் தொடர்புகளை ஏற்படுத்த முயல வேண்டும்.

மேலும், புரட்சிகர போராட்டங்களைப் பலப்படுத்துவதற்காக தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், அறிவுஜீவிகள் மத்தியில் கல்வி புகட்டி, உத்வேகப்படுத்தி அவர்களை ஒன்றிணைக்க அவரது புரட்சிகர போதனைகள் மீதான விவாதங்களை மேற்கொள்ள வேண்டும். நாடு முழுவதும் பரவலாக புத்தக நிலையங்கள், பொன்மொழிக் கண்காட்சிகள் ஏற்பாடு செய்தல் வேண்டும். ‘மேலும் சில சித்தாந்த மற்றும் ஸ்தாபனப் பிரச்சினைகள் குறித்து” எனும் நூலில் இவற்றை ஏற்கனவே விவாதித்திருக்கிறேன் ■

*புரட்சிகர வாழ்த்துக்களுடன்*

**பிரவாஸ் கோஷ்**

*பொதுச் செயலாளர், எஸ்.யு.சி.ஐ (கம்யூனிஸ்ட்)*

## விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் மாநில மாநாடு



# ஆகஸ்ட் 14, 1947 இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் கொடூரம்

இந்தியா சுதந்திரதின பவளவிழாவை கொண்டாடவிருக்கிறது. வீடெங்கும் தேசியக் கொடியை ஏற்றச்சொல்லி மக்களையும் மத்திய அரசாங்கம் கோரியுள்ளது. அன்றைய தினம் செங்கோட்டையில் கோலாகல நிகழ்ச்சிகள் நடைபெறும். அரசுவிழா நாடெங்கும் நடைபெறும். அதிகாரிகளும் அமைச்சர்களும் விருந்து உபச்சாரத்தில் குதூகலமாக இருப்பார்கள். ஆனால், 75 ஆண்டுகளுக்கு முன்பு, சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்ட அன்றும், அதைத் தொடர்ந்த சில வாரங்களிலும் சுமார் 2 கோடி மக்களின் சுதந்திரமும் வாழ்வாதரமும் பறிக்கப்பட்ட சம்பவம் நினைவு கூறப்பட மாட்டாது. தொடர்ந்து அச்சம்பவம் பள்ளி களிலோ வரலாற்றுப் பாடப் புத்தகங்களிலோ, ஊடகங்களிலோ குறிப்பிடப்படாமல் இருட்டடிப்பு செய்யப்படுகின்றது.

வரலாற்றிலேயே மிகப்பெரிய அளவிலான மக்கள் புலப்பெயர்ச்சியாகக் கருதப்படும் அந்தச் சம்பவம், நேற்று வரை சகோதரர்களாக வாழ்ந்துகொண்டிருந்த இருமதத்தினர் சுதந்திரப் பிரகடனத்தால் தமக்குள்ளேயே வெட்டிக்குத்தி கொலை செய்துகொண்ட சம்பவம், சுமார் 20 இலட்சம் உயிர்கள் தமக்குள்ளேயே அடித்துக் கொண்டும் ராணுவத்தால் சுடப்பட்டும் மடிந்த சம்பவம் இன்றுவரை பலருக்கு, குறிப்பாக இன்றைய இளைய தலைமுறைக்குத் தெரியாது. அதுதான், ஆகஸ்ட் 14, 1947 இரவு இந்தியா பாகிஸ்தான் என்று நாடு இரண்டாக செயற்கையாகப் பிரித்து எல்லைகள் அறிவிக்கப்பட்ட 'பிரிவினைப்பிரகடன' நாள் ஆகும்.

அன்றைய தினம் பஞ்சாப், ஹரியானா, மேற்கு ராஜஸ்தான், குஜராத், காஷ்மீர், உத்திரப்பிரதேசம், டெல்லி, பீஹார், வங்கம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் வகுப்புக் கலவரம் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது. தாங்கள் தவறான பகுதியில் வாழ்வதாகவும் தாங்கள் வாழ வேண்டிய நாடு எதிர்த்திசையில் இருக்கிறது எனவும் கோடிக் கணக்கான இந்து முஸ்லிம் மக்களுக்கு இந்த அறிவிப்பு உணர்த்தியது. திடுக்கிட்ட அம்மக்கள், சகோதரர்களாலேயே புலம்பெயரத் துரத்தப் பட்டனர். அடுத்த நாள் மாட்டு வண்டிகள் புகை வண்டிகள் கால்நடை என எல்லா வழிகளிலும் இந்துக்கள் மேற்கு மற்றும் கிழக்கு பாகிஸ்தானி லிருந்தும் முஸ்லிம்கள் இந்தியாவிலிருந்தும் அவசரஅவசரமாக புலம் பெயர்ந்தனர். இதற்குக்காரணம் வேற்று மதத்தவர்தான் என ஒருவரை ஒருவர் கடக்கும்போது இந்துக்களும் முஸ்லிம்களும் கொலைசெய்து கொண்டனர். ஏன் அப்படிநேந்தது?

### சுதந்திரப் போராட்டக் காலத்தின் வரலாற்றுச் சூழ்நிலை

சீக்கியர், பௌத்தர், சமனர், முஸ்லிம், இந்து என பல்வேறு மதங்களைக் கொண்ட, வங்க, மராட்டிய, ஒரிய, ராஜஸ்தானிய, தமிழின என்று பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட, பல்வேறு மொழிகளைப் பேசும், பல்வேறு சாதிகளடங்கிய இந்தியா, ஆங்கிலேய ஏகாதிபத்திய சுரண்டல் ஆட்சியாளர்களை எதிர்த்து, இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஒரு தேசமாக ஒருங்கு திரண்டது. சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில், சுதந்திரத்திற்காகப் போராடியது. இந்த ஜனநாயகக் கோட்பாடுகள் 18ஆம் நூற்றாண்டில் நிலப்பிரபு மன்னர்ஆட்சி முறையை, மடாலயங்களின் ஒடுக்குமுறையை எதிர்த்து ஃபிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி ஆகிய மேற்கத்திய நாடுகளில் புதிதாகத் தோன்றிய முதலாளித்துவ வர்க்கத்தினரால் உருவாக்கப் பட்டவை ஆகும். அன்று, முதலாளித்துவ வர்க்கம் முற்போக்கானதாக, சுதந்திரத் தொழிலாளர்களை உருவாக்கக் கூடியதாக இருந்தது. அப்பொழுது ஜனநாயக உரிமைகளும் அந்நாடுகளில் பெருமளவு அடையப்பெற்றன. முதலாளித்து வமும் வளர்ச்சிபெற்று புதிய புதிய சந்தைகளை உலகின் பிறநாடுகளுடன் வணிகம் செய்வதன் மூலம் பெற்றது. தொழிலாளி வர்க்கமும் சாமானிய மக்களும் பழைய மத, இன வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்ட, ஒருதேச உணர்வை அந்நாடுகளில் பெற்றனர். ஆனால் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் மேற்கத்திய முதலாளித்துவம் சந்தை நெருக்கடியில் சிக்கி, பிற்போக்காகி, ஏகாதிபத்தியத் தன்மையை அடைந்துவிட்டது. சந்தை நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தத்தமது நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தை மட்டுமின்றி வணிகத்திற்காக சென்ற நாடுகளை காலனி நாடுகளாக மாற்றி அந்நாடுகளில் முதலீடு செய்து அங்குள்ள தொழிலாளர்களையும் ஈவிரக்கமின்றி மேற்கத்திய ஏகாதிபத்திய முதலாளித்துவம் சுரண்டியது. அவ்வாறுதான் இந்தியாவிலும் ஆங்கிலேய முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகள் 20ஆம் நூற்றண்டின் துவக்கத்தில் காலனியச் சுரண்டல் ஆட்சியை நிறுவினர்.

அதேசமயம், இந்தியாவிலும் முதலாளித்துவ வர்க்கம் தோன்றி வளரத்துவங்கியது. ஆனால் சொந்த நாட்டின் சந்தையும் தொழிலாளர் வர்க்கமும் தொழில்துறையும் அந்நியர் கையில் இருப்பதால், தனது வளர்ச்சிக்காக அதனை மீட்க, ஆங்கிலேயரிடம் முரண்பட வேண்டிய நிலைமை இந்திய முதலாளிகளுக்கு ஏற்பட்டது. சுரண்டப் படும் இந்திய சாமானிய மக்களும் குட்டி முதலாளித்துவ நடுத்தர வர்க்கத்தினரும் பழைமைவாதத்திலிருந்து, நிலப்பிரபுத்துவ ஒடுக்கு முறையிலிருந்து விடுபட, ஆங்கிலேய காலனிய ஆட்சியாளர்களை எதிர்த்து விடுதலைக்காகப் போராடத்துவங்கினர்.

இந்தியாவில் ஜனநாயகத்திற்கான சுதந்திரப்போர் துவங்கியபோது உலகில் ஜனநாயகம் பிற்போக்காகி விட்டது. அந்தக் கட்டத்தில், உலக முதலாளித்துவம் பிற்போக்காகி விட்டதால், அது எழுப்பிய சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற கோட்பாட்டை அவர்களே காலில்போட்டு மிதிக்கத் துவங்கினர். எனவே, மனித சமுதாயம் இனி முன்னேற வேண்டுமானால், தனியுடைமை முதலாளித் துவத்தை தூக்கியெறிந்து பொதுவுடைமை சோசலிசத்தைத் தோற்றுவிக்கவேண்டும் என்ற முற்போக்குச் சிந்தனை உருவாகி முதல் சோசலிசப்புரட்சியும் சோவியத் ரஷ்யாவில் 1917 நவம்பர் 7 அன்று வெற்றிகரமாக நடந்தேறியது. இது சுதந்திரத்திற்காகப் போராடும் பல்வேறு காலனிய நாடுகளின் மக்களையும் கவர்ந்து இழுத்தது. இயற்கையாகவே சோசலிசக்கருத்துக்கள் இந்தியாவில் போராடும் மக்களையும் நடுத்தர குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரையும் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. பகத்சிங், நேதாஜி போன்றோர் சோசலிசக் கருத்துக்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். இந்திய சுதந்திரப் போராட்டத் தலைமை இவர்கள் கையில் சென்று விட்டால், இந்திய முதலாளிகளுக்கு தான் விரும்பும் சுதந்திரம், அதாவது இந்திய மக்களைச் சுரண்டி மேற்கத்திய முதலாளிகளைப் போல் வளரும் சுதந்திரம் கிடைக்காமல், சோவியத் ரஷ்யாவில் ஏற்பட்டதுபோல் இங்கும் தொழிலாளர் வர்க்க ஆட்சி ஏற்பட்டுவிடும். இந்த அச்சம் இந்திய முதலாளிகளை பீடித்தது. ஒருபுறம், ஆங்கிலேய முதலாளித்துவத்தை அதிகாரத்திலிருந்து அகற்றி அங்கு தாம் அமர வேண்டும்; அதற்கு இந்திய மக்களின் சுதந்திரப் போராட்டத்தை தாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதேசமயம் இந்திய தொழிலாளிகளும் விவசாயிகளும் சாமானிய மக்களும் ரஷ்யாவைப்போல் சோசலிசப்புரட்சியை நடத்திவிடக்கூடாது! முற்போக்கு, ஜனநாயக, சோசலிசக் கருத்துக்கள் மக்களிடையே பரவிவிடக்கூடாது! மக்கள், சாதி மத இன உணர்வுகளிலிருந்து விடுபடாமல், மூட நம்பிக்கைகளிலும் சடங்கு சம்பிரதாயங்களிலும் பழைமைவாத சிந்தனை மற்றும் கலாச்சாரத்திலும் மூழ்கியிருக்கவேண்டும்! இவ்வாறு, ஆங்கிலேயரிட மிருந்து ஆட்சியைப் பிடித்து வளரும் ஆவல் கொண்ட இந்திய முதலாளிகள் விரும்பினர். இவ்வாறே, ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளும், இந்திய சுதந்திரப் போராட்டம் சோசலிசத்தில் முடிந்துவிடக்கூடாது என அஞ்சினர்.

ஆக, சோசலிசப் புரட்சியைக் கண்டு அஞ்சி, பழைமைவாத சிந்தனையுடனும் ஆங்கிலேய ஏகாதிபத்திய நலனுடனும் சமரசம் செய்து கொண்டு இந்திய முதலாளித்துவ வர்க்கம் காந்தியத் தலைமையில் சுதந்திரத்தைப்பெற முயற்சித்தது. இறுதியில் ஆகஸ்ட் 15 அன்று அதில் வெற்றியும் பெற்றது. ஆட்சி அதிகாரம் ஆங்கிலேய ஏகாதிபத்திய முதலாளிகளிடமிருந்து இந்திய முதலாளிகளின் கைகளுக்கு மாறியது. இந்தச் சுதந்திரப் போராட்டத்தில் சாமனிய மக்களின் ஒற்றுமையைக் குலைக்க ஆங்கிலேயர்கள் செய்த சதிக்கு இந்திய முதலாளிகளும் உடந்தையாக இருந்தனர். இந்து முஸ்லிம் பிரிவினை, சாதிப் பிரிவினை, இனவெறி, மொழிவெறி ஆகிய எல்லா பிரிவினை சக்திகளையும் ஆங்கிலேயர் களும் இந்திய முதலாளிகளும் ஆதரித்து வளர்த்தனர். காந்தியத் தலைமையிலான காங்கிரஸ் இதனை எதிர்த்து சித்தாந்த கலாச்சாரப் போராட்டத்தை நடத்தவில்லை. ஆக, இந்து முஸ்லிம் வேறுபாடுகள் மறைவதற்குப் பதிலாக வளர்ந்தன.

### ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இந்தியத் தலைவர்களும் பலியானார்கள்

1905இல் வங்கப்பிரிவினையை ஆங்கிலேயர்கள் முன்மொழிந்த பிறகு முஹம்மது அலிஜின்னா தலைமையில் முஸ்லிம்லீக் கட்சி துவங்கப்பட்டது. ஆனால் ஒன்றுபட்ட மக்கள் வங்கப் பிரிவினையை முறியடித்ததால் இக்கட்சி பெயரளவிலேயே நீண்ட நாட்கள் இயங்கியது. தொடர்ந்து உருவாக்கப்பட்ட மதவெறித் தீயினாலும் காந்தியத் தலைமையின் இந்துமதச் சார்பு அரசியலாலும் 1930க்குப் பிறகு முஸ்லிம் லீக்கின் தனி முஸ்லிம்நாடு கோரிக்கை வலுப்பெறத் துவங்கியது. முஸ்லிம்லீக் மட்டுமின்றி, அப்பொழுது ஆர்எஸ்எஸ்ஸும் இந்துமகா சபையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இருதேசக் கோட்பாட்டை (Two nation theory) ஆதரித்தன. இந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனி நாடாகப் பிரிவதே மதவெறி மோதல்களுக்குத் தீர்வு எனக்கருதினர். ஆனால் சாமனிய மக்கள் இத்தகைய அரசியல் கோட்பாடுகளைப்பற்றி விழிப்புணர்வுடன் இல்லை. அவர்கள் எப்போதும் போல் சகோதரர்களாக வாழ்ந்தனர். மதவெறிச் சக்திகள் வலுவாகச் செயல்படும் இடங்களிலும் நேரத்திலும் மக்களின் ஒருபகுதியினர் மத வெறியாட்டத்திற்குப் பலியாகினர் என்றாலும், நாடே இரண்டாகப் பிளவுபடும் என அவர்கள் எண்ணவில்லை.

ஆனால் அதைத்தான் ஆகஸ்ட் 14, 1947 இரவு இந்தியாவின் கடைசி வைஸ்ராய் மவுன்ட் பேட்டன் பிரபுவும், ஜின்னாவும், நேருவும் செய்தனர். பிரிவினைப் பிரகடணம் என்ற சக்திவாய்த அணுகுண்டை வீசினர். அதற்கு 20 இலட்சம்பேர் இறந்தனர். ஜப்பானில் வீசப்பட்ட உண்மையான அணுகுண்டுகளுக்குக்கூட இரண்டரை இலட்சம் மக்கள்தான் மடிந்தனர்.

### பிரிவினைக்கான அரைகுறை தயாரிப்புகள்

முன்னதாக, 1946 வரைஆங்கிலேயர்களே நாட்டைப் பிரிப்பதை ஆதரிக்கவில்லை. ஆனால் ஜின்னா, தனிநாடு கோரிக்கையிலிருந்து விட்டுக்கொடுக்கவில்லை. ஆனால் காந்தி தனிப்பட்டமுறையில் பிரிவினையை ஆதரிக்க வில்லை. இந்துமகாசபை அகண்ட பாரதத்தில் முஸ்லிம்கள் இந்து தர்மத்தை ஏற்றுக் கொண்டு அடங்கி வாழவேண்டும் என விரும்பினர். இறுதியில் நேரு பிரிவினையை ஒப்புக் கொண்டதால் மவுன்ட் பேட்டன் பிரபு ஜூன் 3, 1947 அன்று, மதத்தின் அடிப்படையில் பிரிவினை விரைவில் அறிவிக்கப்பட உள்ளதாக தெரிவித்தார். அதேபோல் ஆகஸ்ட் 14 இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கப்படும் என்றும் ஜூன் மாதமே அறிவித்தார். 'விரைவில்' செய்வதாகச் சொன்னவையெல்லாம் எப்படி வழக்கமாகக் காலதாமதமானது என்பதை அறிந்திருந்த மக்கள் இதுவும் உடனடியாக வரப்போவதில்லை எனநினைத்தனர். காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை, லாகூர் முதல் டாக்காவரை எங்கும் பரவிக்கிடக்கும் இந்துமுஸ்லிம் மக்களைக்கொண்ட இந்திய துணைக்கண்டத்தை மதத்தின் அடிப்படையில் பிரிப்பது எப்படி சாத்தியம்? பெரும்பான்மை முஸ்லிம்கள் இருக்கும் பகுதிகளை மட்டும் முஸ்லிம் நாடாக மாற்ற வேண்டும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

## இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் கொடூரம்

# மக்கள் பிரச்சினையையோ மதவெறிப் பிரச்சினையையோ தீர்க்கவில்லை

*3ம் பக்கத் தொடர்ச்சி*

எனக்கேட்டால், இந்தியாவின் பிற பகுதியில் வாழும் முஸ்லிம்கள் எங்கு செல்வார்கள்? அதேபோல் அங்கு வாழும் இந்துக்கள் சிறுபான்மையாகிவிட மாட்டார்களா? அவர்கள் பெரும்பான்மை இந்துக்கள் வாழும் நாட்டிற்கு வரவேண்டுமா? மக்கள் தங்களின் பாரம்பரிய இருப்பிடத்தை விட்டு வீடுகளை உடைமைகளை விட்டு வாழ்வாதாரத்தை இழந்து இனந்தெரியாத பிரதேசத்திற்கு எப்படிவருவார்கள், அவர்கள் பிறரால் எப்படி வரவேற்கப்படுவார்கள்? ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன் தம்பிக் குள்ளாகவே வரப்புத் தகராறு வருடக்கணக்கில் தீர்க்கப்படாமல் இருக்கும்போது எப்படி ஒருதேசம் இரண்டாகக் கிழிக்கப்படுவதை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்? வெறும் அரசியலுக்காகப் பேசப்பட்ட தனிநாடு கோரிக்கை உண்மையாகப் போகிறதென்றால் அது எவ்வளவு ஆழமான, ஆபத்தான விசயம்? எனினும் அரசாங்கம் முஸ்லிம் அதிகமாக வாழும் பஞ்சாப் மற்றும் வங்க மாகாணத்தை மட்டும் இரண்டாகப் பிரிப்பது என்ற ஜின்னாவின் கோரிக்கைக்கு நேரு ஒப்புக் கொள்ள, அதை ஜீன் 3அன்று அறிவிப்பாக வெளியிட்டது.

அவ்வாறு தேச வரைபடத்தை 'இரண்டாகக் கிழிக்கும்' வேலையை பூகோள நிபுணரிடமோ, இந்தியாவை நன்கறிந்த நபரிடமோ, இருதரப்பு பிரதிநிதிகளைக் கொண்ட குழுவிடமோ மவுண்ட்பேட்டன் பிரபு ஒப்படைக்கவில்லை. இதில் எந்த நிபுணத்துவமும் இல்லாத ஒரு வழக்கறிஞரான சர்சிரில் ஜான்ராட் கிளிஃப் என்பவரிடம் எல்லையை வரையறுக்கும் பணிகொடுக்கப்பட்டது. அதற்கு 5 வாரங்கள் மட்டுமே அவகாசமும் கொடுக்கப்பட்டது. பஞ்சாப், வங்கம் ஆகிய மாகாணங்களில் தொகுதிகள், வாக்காளர்களில் முஸ்லிம் இந்து விகிதம், குடியிருப்பு மக்கள்தொகை கணக்கு, நிலபதிவேடு விவரங்கள் என தனக்குக் கிடைத்த அரைகுறை மற்றும் திரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு அவரும் மேற்கு மற்றும் கிழக்குப் பாகிஸ்தான் எல்லைக்கோட்டை வரைபடத்தில் ஆகஸ்ட் 9இல் போட்டுக் கொடுத்தார் ஆகஸ்ட் 12, 1947ல் அந்த எல்லை அறிவிக்கப்பட்டது. ஆனால் முழுவிவரங்களும் ஆகஸ்ட் 17 அன்று விளக்கியுரைக்கப்பட்டது. இதில் இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் இணைய விரும்பாத காஷ்மீர் தற்காலிகமாக தனித்து விடப்பட்டது.

அன்று இந்திய மக்கள்தொகை சுமார் 39 கோடி. பிரிவினைக்குப் பிறகு 3 கோடி மக்கள் மேற்கு பாகிஸ்தானிலும் 3 கோடி கிழக்கு பாகிஸ்தானிலும் எஞ்சிய 33 கோடிமக்கள் இந்தியாவிலும் இருந்தனர். தாங்கள் தவறான பகுதியில் வசிக்கிறோமோ என நினைத்து இருவகுப்பு மக்களும் புலம்பெயரத் துவங்கினர். சுமார் 72.3 இலட்சம் முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கும் 73 இலட்சம் இந்துக்கள் இந்தியா விற்கும் புலம் பெயர்ந்தனர். போக்குவரத்து வசதிகள் அற்ற ஏழை நாட்டில் அக்காலத்தில், விருப்பமின்றி நிர்ப்பந்தத்தால் நடைபெற்ற மிகப்பெரும் மக்கள்தொகை இடமாற்றம் எத்தகைய கொடுமையாக இருந்திருக்கும் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். இது தற்காலிகப் பெயர்ச்சிதான், மீண்டும் திரும்பிவிடலாம் என நினைத்து உடமைகளை விட்டுச்சென்றவர்கள் பலர். திரும்பி வரக்கூடாது என அவர்களை மாற்றுமதத்தினரே கொன்றனர்.

அதுமட்டுமல்ல. நிர்வாகத்தை, ராணுவத்தை, தகவல் தொடர்பை, நாணயத்தை எல்லாம் பிரிக்கவேண்டும். பிரிக்கப்படாத இந்தியாவின் ராணுவத்தில் 2,60,000 இந்துக்களும் சீக்கியர்களும் புதிய இந்திய ராணுவத்திற்கும் 1,40,000 வீரர்கள் பிரதானமாக முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கும் பிரித்து அனுப்பப்பட்டனர்.

வேதனை என்னவென்றால், நேற்றுவரை ஒன்றாக அமர்ந்து உண்டு உறங்கி தோழர்களாக வாழ்ந்துவந்த ராணுவ வீரர்கள், அடுத்த சில மாதங்களிலேயே ஒருவரை ஒருவர் எதிரி ராணுவத்தினராகக் கருதி சுட்டுக்கொல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். காஷ்மீரை மகாராஜா ஹரிசிங், முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியை பாகிஸ்தானுடன் இணைக்க மாட்டேன் என்று அறிவித்ததால் கோபமுற்ற பாகிஸ்தான் அரசாங்கம், அங்கு மலைவாழ் முஸ்லிம் மக்களை ஊடுருவச்செய்து அப்பகுதியை தன்னுடன் இணைக்க முயற்சித்தது. ஹரிசிங் இந்திய உதவியை நாடினார். இந்திய ராணுவம் பாகிஸ்தான் ராணுவத்தினரை போரிட்டு விரட்டியது. அதில் எதிரெதிராக சந்தித்தவீரர்கள் முன்பு பெரும்பாலும் ஒரே ராணுவப்பிரிவில் இருந்தவர்கள் ஆவர்.

'டான் (Dawn)' பத்திரிகை இதை எல்லைப் படுகொலை என அப்பொழுதே வருணித்தது. இந்தக் கொடூரத்தை அறிந்த சிரில் ராட்கிளிஃப் இறுதிவரை மனவருத்தத்தில் இருந்தார். அவருக்கு சன்மானமாக அளிக்கப்பட்ட 3000 ஆயிரம் பவுண்ட் பிரிட்டிஷ் பணத்தையும் வாங்க மறுத்துவிட்டார். பல இலட்சம் பேர்கள் தங்களைத் தாங்களே கொன்றுகுவிக்கப்பட நான் காரணமாகி விட்டேன் என்பதை உணர்ந்த அவர் வாழ்நாள் முழுவதும் வெளியே தலைகாட்டுவதை வெறுத்து மவுனமாகவே வாழ்ந்தார்.

1.5 கோடி பேர் வீடிழந்து, 20 இலட்சம்பேர் இறந்த இந்த மாபெரும் வரலாற்றுத் துயரத்தை ஆளுவோர் எதிர்பார்க்கவில்லையா? இதற்கு அவர்களது நிலைபாடும் உண்மை விவரமும் என்னவென்று பார்ப்போம்.

### ஆட்சியாளர்களின் கணிப்பும் யதார்த்தமும்

**அவர்களது கூற்று:** மதவேற்றுமையைத் தீர்ப்பதே தேசப்பிரிவினையின் நோக்கம்

**யதார்த்தம்:** பிரிவினைத்திட்டத்தை எதிர்த்து பஞ்சாபில் மாபெரும் மக்களின் ஒன்றுபட்ட போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன. மேலும், மதவேற்றுமையினால் ஏற்படும் பிரச்சினைகள் தீர்வதற்குப் பதிலாக, இந்திய பாகிஸ்தான் பிரிவினை மதவெறியை இருநாடுகளிலும் அதிகரித்துவிட்டது. ஒன்றுபட்ட இந்தியா விடுதலை அடைந்தால் பெரும்பான்மை இந்துக்களின் அதிகாரத்திற்கு அடிபணிய நேரிடும்; எனவே தனிநாடு வேண்டும் என்ற ஜின்னா போன்றோர் வாதம் பிரிவினைக்குப் பிறகும் நிலைத்துவிட்டது. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பெரும்பான்மை மதவெறி இன்று தலை விரித்தாடுகிறது.

**அவர்களது கூற்று:** பிரிவினையால் தோன்றிய மதக்கலவரம் எதிர்பாராதது, தன் னெழுச்சியானது.

**யதார்த்தம்:** பிரிவினையால் மக்கள் கட்டாயமாக இடம்பெயர வேண்டியதில்லை என்று சட்டம் சொன்ன போதிலும், மக்கள் அந்த கோரிக்கையை வைத்ததே தமக்கென்று தனிநாடு வேண்டும் என்பதால்தானாகும். எனவே பாகிஸ்தானில் இருக்கும் இந்துக்கள் கட்டாயமாக விரட்டப்படுவதும் அதே போல் இந்தியாவிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்படுவதும் நடந்தே தீரும் என்பதை அனைவரும் அறிவர். இது குறித்த அச்சம் பலராலும் தெரிவிக்கப்பட்டது. காந்திஜியும் இதனால் இதை விரும்பவில்லை. இவையெல்லாம் முன்பே தெரியும். பிரிவினை மிகப்பெரிய இடப் பெயர்ச்சியை உருவாக்கும் என்ற அச்சமும் மக்களிடையே நிலவி வந்தது. ஆனால், ஆளுவோர் அவர்கள் சந்திக்கப் போகும் பிரச்சினைகளைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்பட வில்லை.

**அவர்களது கூற்று:** நீண்டநாள் திட்டமிடலின் முடிவே தேசப் பிரிவினையாகும்.

**யதார்த்தம்:** 1946 வரை ஆங்கிலேய ஆட்சியாளர்களே பிரிவினைக்குத் தயாராக இல்லை. மேலும், நேதாஜியின் ஐஎன்ஏ ராணுவ வீரர்களை கைதிகளாகப் பிடித்து பிரிட்டிஷ் இந்தியத் துரோகிகள் என டெல்லி செங்கோட்டையில் விசாரித்து தண்டனை கொடுக்கும் வேலையில் ஆங்கிலேயர்கள் ஈடுபட்டிருந்தனர். அது மிகவும் சுலபம் என நினைத்தவர்களுக்கு, அதுவே நாடு முழுவதும் கிளர்ச்சிகளையும் ராணுவத்துக்குள்ளேயே சிப்பாய்க் கிளர்ச்சிகளையும் உருவாக்கி போராட்டமாக வெடிக்கும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. துரோகி என ஆங்கிலேயர்களாலும், நேருவாலும் கம்யூனிஸ்டு களாலும் வருணிக்கப்பட்ட நேதாஜிக்கு இவ்வளவு பெரிய மதிப்பு மக்களிடையே இருப்பதை அதுவரை யாரும் அறியவில்லை. உண்மையில் விரைவாக சுதந்திரம் வழங்கிவிட்டு ஓடும் நிலைக்கு ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகள் தள்ளப்பட்டு விட்டனர். இந்நிலையில் பிரிவினையை நன்கு திட்டமிட்டதாகச் சொல்வது அபத்தமாகும்.

**அவர்களது கூற்று:** பிரிட்டிஷ் அரசாங்கம், இந்தியா தனது கட்டுப்பாட்டில் உள்ளது, எனவே பிரிப்பது எளிது என நினைத்தனர்.

**யதார்த்தம்:** உண்மையில் இந்தியா முழுமைக்கும் அவர்கள் ஆட்சியின்கீழ் இல்லை. இந்தியாவில் சுமார் மூன்றில் ஒருபகுதி 500க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களின் ஆட்சியின்கீழ் இருந்தன. காஷ்மீர், ஹைதராபாத், திருவாங்கூர், மைசூர், புதுக்கோட்டை என பல பகுதிகள் இதற்கு உதாரணமாகும். எனவே இந்திய மக்கள் முழுமைக்குமான முடிவை ஆங்கிலேயர்கள் ஜின்னா நேரு துணையுடன் எடுக்க முடியாது.

**அவர்களது கூற்று:** தேசப் பிரிவினையால் எழுந்த பிரச்சினை எல்லைப்பகுதிகளில் மட்டுமே இருந்தது.

**யதார்த்தம்:** ஹரியானா, ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற மாகாணங்களிலும் பல்வேறு தென்னிந்திய மாகாணங்களிலும் மதக்கலவரங்கள் நடந்தன. வட மாநிலங்களில் ஆயிரக்கணக்கில் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்துக்களும் பல பகுதிகளில் கொல்லப்பட்டனர் என்பது வரலாற்றுத் தரவுகளாகும். ஆக, இந்தப் பிரிவினை மக்கள் பிரச்சினைகளையோ மதவெறிப் பிரச்சினைகளையோ தீர்க்கவில்லை என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

### ஆகஸ்ட் 14ஐ பிரிவினை கொடூர நினைவு நாளாக அனுசரிக்க பிரதமர் அறிவிப்பு

சென்ற ஆண்டு பாரதப் பிரதமர் 74வது சுதந்திர தினத்திற்கு முந்தைய நாள், ஆகஸ்ட் 14 அன்று அந்நாளை பிரிவினை கொடூர நினைவு நாளாக அனுசரிக்கவேண்டும் என்று அறிவித்தார். சரிதான். அப்படியென்றால் அதை அவர்களது இந்துமகாசபா இயக்கம் அன்றையதினம் அதை எதிர்த்ததா? அவர்கள்தானே இருதேசம் என்ற கோட்பாட்டை வைத்திருந்தார்கள்! இன்று பிரிவினைப் படுகொலைக்கான பழியை காங்கிரஸ் மீது சுமத்தவே பிரதமர் மோடி இவ்வாறு சொல்கிறார். மோடியின் அறிவிப்பை பாகிஸ்தான் பிரதமர் கண்டித்தார். ஆனால் அவரும் பிரிவினையை தவறு என்றோ அதனால் ஏற்பட்ட துயரத்தை இல்லை என்றோ மறுக்கவில்லை. மாறாக, இன்று இந்தியாவில் மதவெறியைத் தூண்டி சிறுபான்மையினரின் வீடுகளை இடிக்கும் பாஜக ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கும் மோடிக்கு பிரிவினை துயரத்தைக் கண்டிக்க என்ன தகுதி இருக்கிறது என மட்டுமே விமர்சித்துள்ளார். இவர்கள் இருவருக்கும் உண்மையில் 20 இலட்சம் பேர் உயிரிழந்த கோரச்சம்பவம் முக்கியமில்லை. இன்றும் இதை வைத்து அரசியல் செய்வதையே விரும்புகின்றனர்.

### இந்திய பாகிஸ்தான் பிரிவினை மாபெரும் வரலாற்றுப் பிழை

இக்காலகட்டத்தின் மாபெரும் மார்க்சியத் தலைவர்களில் ஒருவரான தோழர் சிப்தாஸ் கோஷ், மார்க்சிசத்தின் அடிப்படையில் அன்றே பிரிவினையைக் கண்டித்தார். மதத்தின் அடிப்படையிலான தேசப்பிரிவினை வரலாற்று வளர்ச்சி விதிகளின்படி பிற்போக்கானது,

தொடர்ச்சி 6ம் பக்கம்

# கள்ளக்குறிச்சி மாணவியின் மர்ம மரணம் – கவலைதரும் கல்விச் சூழல்

சமீபத்தில் கள்ளக்குறிச்சி அருகே உள்ள சக்தி சர்வதேச பள்ளியில் **+2** மாணவி ஸ்ரீமதி அப்பள்ளி விடுதியில் மர்மமான முறையில் மரணமடைந்ததும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களும் பல்வேறு கேள்விகளையும் விமர்சனங்களையும் எழுப்பியுள்ளன. அங்கு மட்டுமல்லாது மேலும் பல கல்வி நிறுவனங்களில் மாணவ மாணவியர் தற்கொலைகள், பாலியல் வன்கொடுமைகள், சில இடங்களில் மாணவர்கள் ஒழுங்கீனமாக நடந்துகொள்கின்றனர் என்பன போன்ற செய்திகள் அடுத்தடுத்து வெளிவந்தவண்ணம் உள்ளன. இவையெல்லாம் கல்வியை நேசிப்பவர்களை, கல்வியாளர்களை, நல்லெண்ணம் கொண்ட ஆசிரியர்களை, குறிப்பாக பெற்றோர்களை ஆழ்ந்த கவலையடையச் செய்துள்ளன. இதுபோன்ற சம்பவங்கள் கல்வி நிறுவனங்களிலேயே சர்வ சாதாரணமாக நடப்பது ஏன்? இவையெல்லாம் தனித்தனி நிகழ்வுகளா? இல்லை இவற்றிற்கு பொதுவான காரணம் உள்ளதா என்பதை ஆராய வேண்டிய தேவை உள்ளது.

### கள்ளக்குறிச்சி சம்பவமும் அடுத்து நடைபெற்ற நிகழ்வுகளும்

சக்தி பள்ளியில் மாணவி ஸ்ரீமதி விடுதியிலிருந்து கீழே விழுந்து கிடந்ததாக பள்ளியில் காவலர் கூறியதாகவும் அதன்பிறகு அங்கேயே தங்கியுள்ள பள்ளியின் செயலாளர் அந்த இடத்திற்கு தங்கள் சொந்த வாகனத்தில் மருத்துவமனை அழைத்து சென்றதாகவும் கூறுகின்றனர். இடையே மாணவியின் தாயாருக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்ததாகவும் கூறுகின்றனர். மருத்துவ மனைக்கு அம் மாணவியின் தாயார் சென்றபோது அதற்குள் அம்மாணவி இறந்துவிட்டதாகவும், அவரது உடல் பிணவறையில் வைக்கப்பட்டு விட்டதாகவும் கூறியுள்ளனர். அப்போது பள்ளியின் சார்பாக அங்கே யாரும் இல்லை என்கிறார்கள். இறந்த நிலையிலேயே மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவித்ததாகவும், மாணவி சீருடையில் இருந்ததாலும், வேறு சில காரணங்களாலும் தனது மகளின் மரணத்தில் மர்மம் இருக்கிறது என்று ஸ்ரீமதியின் தாயாரும் உறவினர்களும் சந்தேகங்களை எழுப்பினர். அப்பள்ளியில் ஏராளமான சிசிடிவி கேமராக்கள் இருப்பதால் அப்பதிவுகளை காண்பிக்குமாறும், தனது மகளது ஆசிரியர்கள், உடன் படித்த மாணவியருடன் பேசவேண்டுமெனவும் கேட்டுள்ளார். ஆனால் அதற்கு பள்ளி நிர்வாகம் செவி சாய்க்கவில்லை. இது அவரது சந்தேகத்தை அதிகப்படுத்தியது.

பெற்றோரின் சந்தேகங்களை உரிய முறையில் தீர்க்கவேண்டியவர்கள் அதைச் செய்யவில்லை. சிசிடிவி பதிவுகளை வெளிக்கொணர்வது சில மணி நேரங்களில் முடிந்துவிடும் பணியே. பல இடங்களில், பல திசைகளில் சிசிடிவி பதிவுகள் இருக்கும்போது அவற்றை துரிதமாக எடுத்து பெற்றோர்களிடம் காண்பிப்பது சிரமமானதல்ல. எங்கிருந்து எந்த வழியாக எப்படி சென்றார்? வேறு யாரேனும் அந்த நேரங்களில் சென்றார்களா? என்பவையெல்லாம் எளிதாக தெரிந்திருக்கும். ஆனால் அதைப் பள்ளி நிர்வாகமும் செய்யவில்லை, காவல்துறையும் செய்யவில்லை. இதனால் பிரேதப் பரிசோதனை முடிந்து அம்மாணவியின் உடலை வாங்க பெற்றோர் முன்வரவில்லை. தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர். மறு பிரேதப் பரிசோதனை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் தங்கள் சார்பாக ஒரு மருத்துவர் இருக்க வேண்டும் என்ற பெற்றோர் தரப்பு கோரிக்கையை நிராகரித்துவிட்டது. பிரேதப் பரிசோதனையின் அறிக்கையை ஆய்வுக்காக நிபுணர் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் நடைபெற்று **22** நாட்கள் கழித்து திடீரெனெ ஒரு சிசிடிவி காட்சி வெளியிடப்பட்டது. அதில் **13**ஆம் தேதி அதிகாலை **5.23** மணிக்கு அம்மாணவியை பள்ளிக் காவலர் உள்ளிட்ட **3** பேர் தூக்கி செல்வது காட்டப்பட்டது. இதன் மூலம் அது தற்கொலை என்று சொல்கின்றனர். ஆனால் எதற்காக இவ்வளவு நாள் தாமதம்? திடீரென ஊடகங்களில் வெளியிடுவது ஏன்? தொடர்புடைய மற்ற காட்சிகளை காட்டாதது ஏன்? அது மேலும் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

இச்சம்பவம் குறித்து வாசகர்கள் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் செய்திகள் மூலமும் தற்போதைய நிலை குறித்து அறிந்திருப்பார்கள். நிர்வாகத் தரப்பிலிருந்து முதல் இரண்டு குற்றவாளிகளாக, அப்பள்ளியில் பணியாற்றிய ஆசிரியைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். பள்ளியின் தாளாளரும் முதல்வரும் மூன்றாம் நான்காம் குற்றவாளிகளாகச் சேர்க்கப் பட்டிருக்கின்றனர். இவையெல்லாம் காவல்துறையும் அரசாங்கமும் தனியார் நிர்வாகத்திற்கு சார்பாகச் செயல்படுவது தெரிகிறது. மேலும், ஏற்கெனவே மாணவர்கள் மர்மமான முறையில் அங்கு முன்பு பலமுறை இறந்திருப்பதாகவும் அவை தற்கொலை என்று மறைக்கப்பட்டுள்ளதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. ஸ்ரீமதி மரணம் குறித்து தமிழக காவல்துறை முறையாக விசாரித்து வருவதாகக் கூறுகிறது. ஆனால் வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றியுள்ளார்கள்.

இந்த விவகாரத்தில் காவல்துறை விசாரணையை முறையாக பாரபட்சமின்றி துரிதமாக நடத்தி மாணவியின் மரணத்தில் உள்ள மர்மங்களை வெளிக்கொண்டுவந்து உண்மையை உலகிற்கு விரைந்து சொல்ல வேண்டும். மாணவி கொலை செய்யப்பட்டிருந்தால் குற்றவாளிகளுக்கு விரைந்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

ஆனால் கவலை அளிக்கும் விசயம், இதே போன்று பல பள்ளி, கல்லூரிகளில், குறிப்பாக, தனியார் நிறுவனங்களில் இத்தகைய மரணங்கள் அடிக்கடி நடப்பது ஏன் என்ற கேள்வியாகும். கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் தற்கொலைகள், மர்ம மரணங்கள், பாலியல் வன்கொடுமைகள், ஒழுக்கச் சீர்கேடுகள் அதிகரிப்பதற்கான காரணம் என்ன என்பது குறித்து நாம் கவனிக்க வேண்டும்.

### கல்வி நிறுவனங்களில் ஜனநாயக சூழலின்மை

இன்று கல்வி நிறுவனங்களில் ஜனநாயக சூழ்நிலை நிலவவில்லை. ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஒன்றுகூடி தங்கள் பிரச்சினைகளை சொல்லும் உரிமை இல்லை. எனவே கல்வி நிறுவனங்களில் எப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்தாலும் அதுபற்றி ஆசிரியர்களோ, மாணவர்களோ வெளியே பேச முடிவதில்லை. அவர்களே பாதிக்கப்பட்டாலும் பெரும்பாலும் மௌனமாகவே இருக்கும் நிர்ப்பந்தம் உள்ளது. வேலை பறிபோகும் பயம், அடியாட்களை வைத்து மிரட்டி உயிருக்கே ஆபத்து வரும் என்ற அச்சம் ஆசிரியர்களையும் பிற ஊழியர்களையும் கட்டிப்போடுகிறது. பல ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான ரூபாய்களை செலவழித்துப் படிப்பதால், எங்கே தங்கள் மதிப்பெண், படிப்பு பாதிக்கப்படுமோ என்ற அச்சத்தில் மாணவர்கள் நிறுத்தப்படுகின்றனர். இதனால் அங்கு நடக்கும் குற்றங்களும் உண்மைகளும் வெளிவருவதில்லை. மேலும், மதிப்பெண் இலக்கை மட்டுமே வைத்து அங்கு பயிலும் மாணவ மாணவியருக்கு எந்த ஒரு சிறு தோல்வியையும் ஏற்கும் மனநிலை இல்லை. காலை முதல் இரவு வரை ஓய்வே இன்றி வெறுமனே மனப்பாடம் செய்து ஒப்பிக்க மாணவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதில் சற்று தொய்வு ஏற்படும் மாணவர்களை தனியார் கல்வி நிறுவனங்கள் வெளியேற்றும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. இதனால் மாணவர்கள் கடும் மன உளைச்சலில் இருக்கின்றனர்.

கல்விநிறுவன முதலாளிகளுக்கு தங்கள் பிரச்சினைகளைப் பேச (லாபத்தை உத்திரவாதப்படுத்த, சலுகைகள் பெற, முறைகேடுகளில் ஈடுபடுவதை சமாளிக்க) சங்கங்கள் உள்ளன. ஆனால் ஆசிரியர்களோ, மாணவர்களோ சங்கங்களாக ஒன்றுபடுவது தடுக்கப்பட்டுள்ளது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பது வெறும் வார்த்தைகளாகவே கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஆனால் யதார்த்தத்தில் ஒன்றுபட கல்வி நிறுவனங்களே அனுமதிப்பதில்லை.

ஒருவர் கல்வி நிறுவனத்தை நடத்த என்ன தகுதி வேண்டும்? அவர் கல்வியாளராகவோ, கல்வியை நேசிப்பவராகவோ, கல்வித் தகுதி, பண்பாடு உடையவராகவோ இருக்க வேண்டுமென்பதா? இல்லை. அவரிடம் பணமிருந்தால் போதும். இடமிருந்தால் போதும். கல்விக் கடையை விரித்து நடத்தலாம் என்பதா? மேலும், நிர்வாகத்தில் முதலாளியின் குடும்பத்தினரும், அதில் வயதில் சிறியவர்களும் கூட ஆதிக்கம் செலுத்தும் நிலை உள்ளது. அனுமதி இன்றி கட்டிடங்கள், நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூலித்தல், ஆசிரியர்களுக்கு உரிய ஊதியம் வழங்காமை போன்றவை அப்பட்டமாக நடைபெற்று வருகின்றன. அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் நடத்தும் பள்ளிகளெனில் இன்னும் மோசமான நிலை. இவற்றையெல்லாம் கல்வித்துறை கண்டும் காணாமல் இருக்கின்றனர். அதற்குரிய சன்மானங்களும் சலுகைகளும் கைமாறுகின்றன. சக்தி பள்ளியில் கூட அனுமதி இல்லாமல் விடுதி செயல்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இப்படி முறைகேட்டில் ஈடுபடும் பள்ளிகள் மீது, அனுமதி இல்லாமல் செயல்படும் பள்ளிகள் மீது அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. முதற்கண் கல்வித்துறை ஒழுங்குமுறையை அரசாங்கம் சட்டரீதியாகவே கைவிட்டுவிட்டது. இரண்டாவதாக, அரசுப் பள்ளி, கல்லூரிகள் கழிப்பறை உள்ளிட்ட கட்டுமான வசதி, போதிய ஆசிரியர் நியமனமின்மை ஆகியவற்றால் தரமிழந்து, மக்கள் தனியாரை நோக்கி ஓடும் சூழ்நிலை நிலவுகிறது. இந்தச் சூழலைப் பயன்படுத்தி, மிகவும் அத்தியாவசியமான கல்வியை லாபத்திற்கு விற்கும் தனியார் முதலாளிகள் தங்கள் மனம்போல் நிர்வாகத்தை நடத்துகின்றனர்.

குற்றங்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் மட்டுமல்ல, அரசு நிறுவனங்களிலும் நடக்கின்றன. காரணம், இன்றைய யதார்த்த சூழலில் மாணவர்களும் இளைஞர்களும் இழிவான பண்பாட்டிற்கு தள்ளப்படுவதாகும். இதில் வழிதவறும் அல்லது தவறு செய்யும் மாணவர்கள், குறிப்பாக மாணவியர் பயமுறுத்தப்பட்டு சுரண்டப்படுகின்றனர். இந்த சூழல்தான் குற்றங்கள் நடைபெறுவதற்கும் தற்கொலைகள் நடப்பதற்கும் வழிவகை செய்கின்றது. எங்கெல்லாம் மக்கள் பிரச்சினை எழுப்புகின்றனரோ அங்கு மட்டும்தான் விசயங்கள் வெளியே வருகின்றன. எதிர்ப்பு இல்லாத இடங்களில் ஏராளமான பிரச்சினைகள் மூடி மறைக்கப்படுகின்றன.

ஆனால் இதுபோன்ற குற்றங்கள், மரணங்கள் நிகழும்போது சிலர் பாரபட்சமாக, சாதி, மதம், மொழி ரீதியாகப் பேசித் திசைதிருப்புவதும் பொய்யான வதந்திகளைப் பரப்புவதும் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்படுவதும் வேதனையளிக்கிறது. கள்ளக்குறிச்சி மாணவி மரண விசயத்திலும் கூட அவரைப்பற்றி இழிவான விசயங்கள் பகிரங்கமாக பரப்பப் படுகின்றன. ஆனால் அப்படிப்பட்டவர்கள் மீது காவல்துறை இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுபோன்ற வழக்குகளை உரிய முறையில் விசாரித்து குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைப்பது அரிதினும் அரிதாக உள்ளது. பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கு, சென்னை ஐஐடி, பத்ம ஷேசாத்ரி பள்ளி பிரச்சினைகள் போன்ற எண்ணற்ற சம்பவங்களில் என்ன நடந்துள்ளது என்பதே இதற்கு உதாரணங்கள். 'குற்றவாளியாக பேசப்பட்டவர்கள், துணிச்சலுடன் சமுதாயத்தில் நடமாடிக்கொண்டிருக்கின்றனர். தாமதிக்கப்படும் நீதி–அநீதி' என்பதற்கிணங்க நீதி தாமதிக்கப் படுவதாலும் குற்றவாளிகள் தைரியமாக குற்றமிழைக்கின்றனர்.

தொடர்ச்சி **6**ம் பக்கம்

### கள்ளக்குறிச்சி மாணவியின் மர்ம மரணம்

# பொதுமக்களும் கல்வியாளர்களும் மாணவ சமுதாயத்தின் எதிர்காலத்தைக் காப்பாற்ற முன்வரவேண்டும்

5ம் பக்கத் தொடர்ச்சி

**போராட்டத்தில் குதித்த இளைஞர்களும் போராட்டப் போர்வையில் ரவுடிகளும்**

இந்த நிலையில் 17 ஜூலை 2022 ஞாயிறு அன்று காலை ஏராளமானோர் பள்ளின் முன்பாக திரண்டு போராடினர். காவல்துறை தடியடி நடத்தியதைத் தொடர்ந்து அங்கே மிகப்பெரிய வன்முறை வெடித்து பள்ளி சூறையாடப் பட்டுவிட்டது. இதற்கு மாணவியின் தாயார்தான் காரணம் என்று பள்ளியின் செயலாளர் குற்றம் சாட்டினார். ஆனால் இதில் தாங்கள் பங்கேற்கவே இல்லை, நாங்கள் அமைதியாகவே போராடி வருகிறோம் என்று மாணவியின் தாயார் தெரிவித்தார். இந்தப் போராட்டத்திற்குப் பிறகுதான் பள்ளி நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர்.

மாணவியின் சந்தேகத்திற்குரிய மரணமும் தாயாரின் கண்ணீரும் தமிழக இளைஞர்களின் இதயத்தை எப்படித் தொடாமல் இருக்க முடியும்? அவர்கள் அணிதிரண்டார்கள். ஜல்லிக் கட்டு துவங்கி, நெடுவாசல் போராட்டம், குடியுரிமை சட்டத்திருத்த மசோதா எதிர்ப்பு போன்ற பல சமயங்களில் ஒன்றுசேர்ந்த இளைஞர்கள் தொடர்ந்து சமூக ஊடக வாயிலாக அமைப்பாகத் திரண்டு வருகின்றனர். இப்படி பல்வேறு அமைப்புகள் வலைதளங்களில் செயல்படுவது உளவுத் துறைக்கும் தெரியும். செய்தி ஊடகங்களில் சொல்வது போல உளவுத்துறை தூங்கிவிட்டது என்பதை ஏற்பதற்கில்லை. யாரெல்லாம் சமூக ஊடகங்கள் வாயிலாக திரள்கிறார்கள், அவர்களை எப்படி பிடித்து அச்சுறுத்துவது என உளவுத் துறையும் காத்திருந்தது. எனவேதான் ஆயிரக்கணக்கில் எதிர்ப்பைக் காட்ட வந்த இளைஞர்கள் சாலை களிலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர். பலர் சமூக ஊடகத்தில் கருத்து பகிர்ந்தமைக்காகக் கைது செய்யப்பட்டனர். இளைஞர்கள் கள்ளக் குறிச்சியில் மட்டுமல்லாது சின்ன சேலம் சென்னை போன்ற இடங்களிலும் போராடத் திரண்டனர். சில இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். கள்ளக் குறிச்சியில் மட்டுமே 300க்கும் மேற்பட்ட இளைஞர்களும் பொதுமக்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். நியாயமான முறையில் கல்வி நிறுவனத்தின் முன்பு அமர்ந்து இளைஞர்கள் போராடத் துவங்கிவிட்டால் பிரச்சினை பெரிதாகிவிடும் என்பதை உணர்ந்த காவல்துறையும் பள்ளி நிர்வாகமும் வன்முறையில் ஈடுபட்ட தரப்பினரை எதிர்ப்பின்றி அனுமதித்து சொத்துக்கள் சூறையாடப்படுவதை ஊடகங்களில் மீண்டும் மீண்டும் காட்டினர். இதன் மூலம் உண்மையாகவும் அறவழியிலும் போராட வந்த இளைஞர் கூட்டம் மறைக்கப்பட்டது. பலர் ஆங்காங்கே கைது செய்யப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேல் சிறையில் அடைக்கப் பட்டனர். வன்முறைகளுக்கு தொடர்பில்லா தவர்கள், அரசு வேலைக்காக பயிற்சி தேர்வு எழுதிக் கொண்டிருந்தவர்களையும் கைது செய்துள்ளனர். சம்பந்தப்பட்ட பெற்றோர் ஆதாரங்களைத் தெரிவித்த போதிலும் அந்த இளைஞர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அதேசமயம் தனியார் நிர்வாகமும் அரசாங்கமும் தங்கள் தவறுகளை மூடி மறைக்க வன்முறையைக் காரணம் காட்டிகொள்ள முடிந்தது.

அநீதியை எதிர்க்க வேண்டும் என்று துணிந்த இளைஞர்கள் பாராட்டத்தக்கவர்கள். ஆனால் போராட்ட வழிமுறையும் அவர்களின் போராட்ட அமைப்பும் நினைத்ததை சாதிக்கும் வகையில் இல்லை. வெறும் உணர்ச்சியினால் மட்டும் தூண்டப்படும் போராட்டம், எதிரிகளால் எளிதில் நசுக்கப்பட்டுவிடும். பின்னர் விரக்தி மனப் பான்மையும் சோர்வும் இளைஞர்களைக் கவ்விக் கொள்ளும். அநீதிகள் சமுதாயத்தில் மீண்டும் மீண்டும் நடந்தேறும். எனவே இளைஞர்கள் விவேகத்துடனும் சரியான அரசியல் வழி காட்டுதலுடனும் இயங்கினால் மட்டுமே போராட்டங்கள் இறுதி வெற்றியை நோக்கி முத்திரைகளைப் பதிக்கும். அடக்குமுறைகள் எவ்வளவுதான் ஏவப்பட்ட போதிலும் விவசாயிகள் டெல்லி நகர எல்லைகளில் அயராமல் அமர்ந்து போராடி விவசாய விரோத வேளாண் சட்டங்களை திரும்பப் பெற வைத்து விட்டார்கள் அல்லவா. அதற்குக் காரணம் அவர்களின் சக்திவாய்ந்த கூட்டமைப்பும் போராட்ட வழிமுறையும் ஆகும்.

கல்வி வியாபாரிகள் பிற வியாபாரிகளைப் போலவே செயல்படுவார்கள்.கல்வியை ஒரு வியாபாரமாக நடத்துவதால், அது ஒரு சந்தையாக பார்க்கப்படுகிறது. கல்வி நிறுவனங்களில் தவறு நடந்தாலும் அதை மூடிமறைக்கின்றனர். வெளியே தெரிந்தால் வியாபாரம் பாதிக்கப்படும் என்று கருதுகின்றனர். இவையும் குற்றம் அதிகரிக்க காரணமாகின்றது. ஒரு காலத்தில் தொண்டு மனப்பான்மை உடையவர்கள் கல்வி தர வேண்டும் என்பதற்காக லாப நோக்கமின்றி ஓரளவு கல்வி சேவை செய்தனர் என்பது உண்மையாக இருந்தாலும் தற்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அப்படிப்பட்ட கல்வி நிறு வனங்களும் இன்று வியாபார நோக்கத்துடன் தான் செயல்படுகின்றன.

எனவேதான் புற்றீசல்கள் போல் பெருகிவிட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் கட்டணக் கொள்ளைகள், முறைகேடுகள், ஒழுங்கீனங்கள் மட்டுமல்லாது அங்கு பல்வேறு காரணங் களுக்காகத் தற்கொலைகளும், கொலைகளும் நடக்கின்றன. நாட்டின் வருங்கால தலை முறையினரை செதுக்கவேண்டிய கல்வி நிறுவனங்களிலேயே நிலைமை இப்படி இருந்தால் நாடு எப்படி முன்னேறும். மனிதனை மனிதனாக்கும் குணாம்சங்களைக் கட்டியெழுப்பும் கல்வியை வழங்கும் கல்வி நிறுவனங்களை அரசாங்கம் மட்டுமே நடத்த வேண்டும். கல்வியை அரசாங்கமே ஏற்று நடத்தும்போதுதான் இதுபோன்ற சம்பவங்கள் குறைய வாய்ப்புள்ளது. அங்கு தவறிழைப்போரை மறித்து வியாபாரத்தை பாதிக்காமல் நடத்தும் தேவை இல்லை. ஆனால் அரசாங்கங்களோ, கட்சி பேதமின்றி, மேலும் மேலும் கல்வியைத் தனியார்மயமாக்கி வருகின்றன.

தனியார் கல்வி நிலையங்களில் நடைபெறும் குற்றங்களுக்கு நிர்வாகமும் அரசாங்கமும் பொறுப்பேற்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாணவி மரணத்திற்கு விரைவில் காரணமறிந்து உண்மை வெளிவர வேண்டும். குற்றவாளிகளுக்கும் உடந்தையாக இருந்தோருக்கும் உரிய தண்டனை வழங்க வேண்டும்.

நீதி கேட்டு போராடச் சென்ற இளைஞர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும். நியாயமான போராட்டத்தை ஒருங்கமைத்ததற்கு சமூக ஊடகத்தைப் பயன்படுத்திய ஊடக நிர்வாகிகளை கைது செய்யக் கூடாது.

கல்வியை மேலும் மேலும் தனியார்மயமாக்கும் கொள்கைகளை பொதுமக்களும் கல்வியாளர் களும் எதிர்த்து மாணவச் சமுதாயத்தின் எதிர்காலத்தைக் காப்பாற்றப் போராட முன்வரவேண்டும்.

# இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் கொடூரம் . . .

5ம் பக்கத் தொடர்ச்சி

மாபெரும் வரலாற்றுத் தவறு என விமர்சித்தார். சாதி மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு ஜனநாயக உணர்வுகளின் அடிப்படையில் சுதந்திரப் போராட்டத்தில் சமரசமற்ற தலைமையை மக்கள் உயர்த்திப் பிடிக்கவேண்டும் என அவர் அன்று சுட்டிக்காட்டினார். மாபெரும் தலைவர் லெனின் வரையறுத்தபடி 'ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியும்' என்ற இந்தக் காலகட்டத்தில் சுதந்திரப் போராட்டத்தின் தலைமையை தொழிலாளர்கள் விவசாயிகளை உள்ளடக்கிய பாட்டாளி வர்க்கம் கையிலெடுத்து, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிந்து சோசலிசத்தை நிறுவவேண்டும் என்றார் அவர். இதுவே வரலாற்று வளர்ச்சிவிதியின்படி சரியானது என அவர் விளக்கியுரைத்தார். ஆனால், சுதந்திரப் போராட்டம் இந்திய முதலாளித்துவ வர்க்கத்தால் ஆதரித்து முன்னிறுத்தப்பட்ட, சமரசவாத காந்தியத் தலைமையின்கீழ் நடைபெற்றது. எதிர்ப்பார்த்தபடி தேசப்பிரிவினை, பிரச்சினையைத் தீர்க்கவில்லை, அதிகரித்துவிட்டது.

**பிரிவினை வரலாறு கற்றுத்தரும் பாடம்**

பிரிவினை கொடூரச் சம்பவத்திலிருந்து மக்கள் ஒன்றைத் தெளிவாகக் கற்றுக்கொள்ள வேண்டும். சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே, பெரும்பாலும் அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் ஆளுவோரும் கொள்கைகளை, திட்டங்களை முடிவுசெய்தனர். சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் மக்களின் அரசியல் பங்கெடுப்பு பெருமளவு இல்லை. மக்களிடம் போதிய அரசியல் விழிப்புணர்வு இல்லை. சுதந்திரம் என்றால் என்ன, விடுதலை என்றால் என்ன, எந்த சித்தாந்தத்தை, எந்த கட்சியை, எந்தத் தலைமையைப் பின்பற்றுவது என்பதில் பெரும்பான்மை மக்களுக்குத் தெளிவு இல்லை. கட்சித்தலைவர்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றுதல், அவர்களின் மேலோட்டமான எளிமையைக் கண்டு மதிப்பிடுதல், புரட்சிகரப் போராட்டத்தை வன்முறை என சித்தரிக்கப் பட்டதை நம்புதல் இவை எல்லாம் பெரும்பாலான சாமானிய மக்களிடம் காணப்பட்டன. ஆரோக்கியமான, கூர்மையான, நுண்ணறி வுடனான அரசியல் விவாதங்களில் பொதுமக்கள் ஈடுபடவில்லை. இன்றும்கூட, அரசியலில் ஈடுபடாதிருப்பதே பாதுகாப்பு என நினைப்போர் பெரும்பான்மையாக இருக்கின்றனர். ஆனால், அரசியல்வாதிகளின் திட்டங்கள் நிறைவேற்றப் படும்போது அதற்குபலியாகி, உயிரையும் இழக்கும் கொடூரம் மக்களாகிய தங்களுக்குத்தானே நேருகிறது! மதத்தின் அடிப்படையில் தேசப்பிளவை முன்மொழிந்த கட்சிகளையும் தலைவர்களையும் ஒதுக்கித் தள்ளாததன் விளைவுதான் 20 இலட்சம் பேர் பலியானதற்கு மற்றுமொரு முக்கியக் காரணம் என்பதை அவர்கள் உணர்ந்தார்களா?

எனவே, மக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும். உங்கள் தேவைகளை, கோரிக்கைகளை வலியுறுத்தி எப்போதும் ஒன்றுபட்டு போராட்டங்களை நடத்தவேண்டும். இப்பொழுதாவது, எதிரி யார், நண்பன் யார், நிலவும் அரசமைப்பின் சுரண்டல்தன்மை என்ன, இந்த அரசை எதனால் மாற்றியமைக்க வேண்டும் என்ற கேள்விகளில் தெளிவான பதிலை மக்கள் கொண்டிருக்க வேண்டும். அதற்குரிய ஆரோக்கியமான அரசியல் விவாதங்களில் மக்கள் பங்கெடுக்க வேண்டும். இல்லை என்றால் அன்று, ஆட்சியாளர்களின் பிரிவினைத் திட்டத்திற்கு 20 இலட்சம்பேர் கொடூரமாக உயிரை மாய்த்துக்கொண்டது போன்ற நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் நடப்பதை தவிர்க்க முடியாது. சுதந்திர தின பவளவிழாவை நினைவுகூறும் இவ் வேளையில் இந்திய தேசப்பிரிவினை வரலாறு நமக்குப் புகட்டும் அதிமுக்கியப் பாடம் இதுவேயாகும் ■

## மக்கள் விரோத மின்சார கட்டண உயர்வு

# தேர்தல் வாக்குறுதியை காற்றில் பறக்க விட்ட திமுக

இந்தச் சூழ்நிலையில் மக்களின் அடிப்படைத் தேவையை சிறிதும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் திமுக அரசாங்கம் மின்கட்டண உயர்வுக்கு பரிந்துரைகளை அளித்துள்ளதை எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. உடனடியாக அனைத்தையும் வாபஸ் வாங்க வேண்டும் எனக் கோருகிறது.

மின்சார கட்டணம் உயர்வுக்கு காரணமாக தமிழக அரசாங்கம் கூறும் காரணங்கள்:

1. கடந்த 10 ஆண்டுகளில் மின்சாரத் துறையில். ரூ1.59 இலட்சம் கோடி கடனாக உயர்ந்துள்ளது.

2. தமிழ்நாட்டில் கடந்த எட்டு ஆண்டுகளாக மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படவில்லை.

3. மத்திய அரசும் ஒழுங்குமுறை ஆணையமும் நிதி நிறுவனங்களும் மின் கட்டணங்களை உயர்த்த வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கின்றன. மின் கட்டண உயர்வு அமல்படுத்தப்படவில்லை என்றால் 'உதய் திட்டம்' என்று சொல்லக்கூடிய மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் நிதிக் கடன் கிடைக்காது.

4. அதல பாதாளத்தில் நஷ்டத்தில் இயங்கும் மின்சாரத் துறையை மீட்டெடுக்க மின் கட்டண உயர்வு அவசியமாகி உள்ளது.

5. தமிழகத்துக்கு வரக்கூடிய தொழிற் சாலைகளுக்கு உடனடியாக புதிய மின் தேவைகளை பூர்த்தி செய்ய கூடுதல் மின் உற்பத்தி நிறுவு திறனை உருவாக்கி செயல்பாட்டுக்கு கொண்டுவர நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த மின்சாரக் கட்டண உயர்வு அவசியமாகிறது என கூறுகிறது.

இதுமட்டுமல்லாமல் சீரழிவில் உள்ள மின் துறையை பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாமல் மேம்படுத்துவதற்கு இந்தக் கட்டண உயர்வு அவசியம் என்று கூறப்படுகிறது.

எனவே மின் கட்டண உயர்வை. அமல்படுத்தியே ஆகவேண்டும் என்று தமிழக அரசாங்கம் கூறுகிறது.

மேலே கூறியுள்ள அனைத்து காரணங்களுக்கும் மத்திய மாநில அரசுகளின் தவறான கொள்கைகளும் நடைமுறைகளும், தனியார்கள் லாபம் ஈட்டுவதற்காக தொடர்ந்து கொள்கைகள் வகுக்கப்பட்டதாலும் உயர்மட்ட அளவில் லஞ்ச ஊழல் தலைவிரித்து ஆடுவதாலும் ஏற்பட்ட விளைவுகள் என்று இந்தத் துறை சார்ந்த வல்லுநர்கள் அவ்வப்போது கூறுவதை நாம் அறிவோம்.

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் கட்டண விகித முறைகளை ஒவ்வொரு 100 யூனிட்டுகள் உபயோகத்திற்கும் உயர்வு அறிவிப்பு செய்துள்ளது. உதாரணத்திற்கு 201 முதல் 500 யூனிட்டுகளுக்கு மூன்று ரூபாயாக இருந்த. கட்டணம் இப்பொழுது 4.50 மற்றும் 6.50 என கடுமையான கட்டண உயர்வை அறிவித்திருக்கின்றனர். தற்பொழுது. 500 யூனிட்களுக்கு மேல் உபயோகித்தால் ரூ6.60 ஆக இருந்த கட்டணம் எட்டு ரூபாய் முதல் பதினோரு ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் இந்த பரிந்துரையில் பல்வேறு மக்கள் விரோத அம்சங்கள் ஆங்காங்கே இடம் பெற்று அதே நேரத்தில் தொழிலதிபர்களுக்கான உயரழுத்த மின்சார கட்டணம் குறைந்த அளவே உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் தொழிலதிபர்கள் தாங்களே சொந்தமாக சோலார் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்கி அவற்றிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் பயன்படுத்திக் கொள்ளும் அம்சங்கள் ஏற்கனவே லாபம் ஈட்டும் வகையில் அவர்களுக்கு சாதகமாக இருந்து




**மத்திய மாநில அரசாங்கங்களின் ஜிஎஸ்டி வரி விதிப்பை, மின் கட்டண உயர்வை எதிர்த்து சென்னையில் ஆர்ப்பாட்டம்**

வருகின்றது. சிறு குறு தொழில்களுக்கான மின்சாரக் கட்டணங்களும். கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளன. விசைத்தறிகளுக்கான மின்சாரக் கட்டண உயர்வு 1500 யூனிட்களுக்கு மேலாகப் பயன்படுத்தும் பொழுது யூனிட் ஒன்றுக்கு 6 ரூபாய் என்று கணக்கிடப்படுகிறது. இவை மட்டுமல்லாமல் மாநகரப் பகுதிகளில் மக்கள் வசித்து வரும் உயர் அடுக்குமாடிக் கட்டடங்களில். பொது பயன்பாட்டிற்காக இருக்கின்ற தெருவிளக்குகள் குடிதண்ணீர் ஏற்பாடுகள் போன்றவற்றுக்கு வணிக நிறுவன கணக்கில் மின்சாரக் கட்டணம் விதிக்கப்பட உள்ளது. ஒரு மின் இணைப்புக்கு மேலுள்ளவர்களுக்கு ரூபாய் 225 அதிகப்படியான கட்டணம் செலுத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது

### தேர்தல் வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்ட திமுக

திமுக தேர்தல் வாக்குறுதியாக, தாங்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தப்பட்டால்: 1) இரண்டு மாதத்திற்கு ஒரு முறை எடுக்கப்படும் மின்சார அளவீடு என்பது மாதம் ஒருமுறை என்று மாற்றி அமைக்கப்பட்டு நுகர்வோர் குறைவான கட்டணத்தை செலுத்தி சிறந்த பயனடைவர் 2)மின்சாரக் கட்டணத்துடன் ஒவ்வொரு முறையும் வசூலிக்கப்படும் நிலை கட்டணம் ரூபாய் 50 தடை செய்யப்படும்

3)கடந்த திமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட பல்வேறு மின் திட்டங்களை அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் கிடப்பில் போட்டுவிட்டு தனியாரிடமிருந்து சந்தை விலையைவிட அதிக விலைக்கு வாங்கியதன் மூலம் பெரும் ஊழல் நடைபெறுவதோடு தமிழ்நாடு மின்சார வாரியம் பெருமளவில் இழப்பை சந்தித்துள்ளது. ஆகையால் பொதுமக்கள் கடுமையான கட்டண உயர்வை சந்திக்க வேண்டி உள்ளது. எனவே தனியார் நிறுவனங்களிடமிருந்து அதிகவிலை கொடுத்து மின்சாரம் வாங்குவதைக் குறைத்து சூரிய ஒளிக் காற்றாலை போன்ற மாசற்ற மின்உற்பத்தி நிலையங்களை அமைத்து அவற்றின் மூலம் 20000 மெகாவாட் மின்உற்பத்தி செய்து மக்களுக்கு குறைந்த விலையில் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவை அனைத்தும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மக்களுக்கு தடையற்ற மின்சாரம் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

இன்று ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தவுடன் அனைத்தும் நஷ்டத்தில் இயங்குவதாகவும், கடந்த எட்டு ஆண்டுகள் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்ற காரணங்களை கூறுவது என்பது தேர்தல் வாக்குறுதியை காற்றில் பறக்க விட்டது என்பதைத் தவிர வேறு என்ன? ஏழை எளிய நடுத்தர மக்களை ஏமாற்ற வார்த்தை ஜாலங்களை பயன்படுத்துவது முதலாளித்துவ கட்சிகளின் இயற்கை குணம். உதாரணத்திற்கு ஒரு சில அம்சங்களை குறிப்பிட விரும்புகிறோம். ஒவ்வொரு மாதமும் மின் கணக்கீடு நடத்த இயலாததற்கு காரணம் ஆள் பற்றாக்குறை உள்ளது என்று மின்சாரத்துறை அமைச்சர் கூறியுள்ளார். என்ன ஒரு வேடிக்கை. படித்த இளைஞர்கள் பல லட்சம் பேர் வேலை இல்லாமலும், பல லட்சக்கணக்கில் சொற்ப கூலிக்கு வேலை தேடிக் கொண்டிருக்கையில் ஆள் பற்றாக்குறை என்று அமைச்சர் கூறுகிறார். ஏன் நிரந்தரப் பணிக்கு சில ஆயிரம் இளைஞர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது? அதேபோல் அதிமுக அரசாங்கம் தனியாரிடம் மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்கி ஊழல் புரிந்துள்ளது என்றுகூறிய திமுக அந்த ஊழலைக் கண்டுபிடிக்கவோ அல்லது நடைபெறாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? போதிய மின்சாரத்தை உற்பத்தி செய்ய என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்ற கேள்விக்கும் பதில் இல்லை. மேலும் வருடத்திற்கு ஒருமுறை 6%கட்டண உயர்வு செய்யப்படும் என்ற முடிவு மக்கள் மீதான மிகக் கொடூரமான தாக்குதல் ஆகும். மின் கட்டணம் 6% உயர்த்தப்பட்டால் உற்பத்தி பொருட்களின் விலை உயர்த்தப்படும். அதன் தொடர்ச்சியாக அனைத்து பொருட்களின் விலைகளும் உயரும். இறுதியில் சாதாரண மக்கள் மீது யாவும் சுமத்தப்படும். நிரந்தரமான சம்பளம் வாங்குபவர்களுக்கும்கூட வருடத்திற்கு 5%கூட சம்பளத்தை உயர்த்துவதில்லை. நிரந்தரமற்ற வேலை செய்பவர்களை பற்றி இங்கு எதுவும் கூறத் தேவையில்லை. ஆக வருடத்திற்கு 6%மின் கட்டணத்தை உயர்த்திக் கொள்ளும் முடிவு முழுக்க மக்கள் விரோத நடவடிக்கையாகும்.

### இலவசம் மின்சாரம்

பல ஆண்டுகளாக விவசாயிகளும் சிறு தொழில் செய்வோரும் தொடர்ந்து பல ஆண்டுகளாகப் போராடியதன் விளைவாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரமும் சிறு குறு தொழில்களுக்கு குறைந்தபட்ச யூனிட் மின்சாரம் இலவசமாகவும் வழங்கப்பட்டது. இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டாலும் மற்ற இடுபொருட்கள் அனைத்திற்கும் விலை உயர்வு அதேபோல் சிறு குறு தொழில் செய்பவர்களும் தங்களது தொழிலுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் பொழுது அதிக விலை கொடுத்து வாங்கும் பொழுது அந்த இலவசம் காணாமல் போய்விடும். இலவசத்தின் மூலமாக அதீத பலனடைவது பணக்கார விவசாயிகளும் பணக்காரத் தொழில் நிறுவனங்களுமே ஆகும். பணக்காரார்களுக்குக் கிடைப்பதில் சிறிது சிறு விவசாயிகளுக்கும் சிறு தொழில் நடத்துபவர்களுக்கும் கிடைக்கிறது அவ்வளவுதான். ஆகவே இலவசம் என்பதுகூட ஒரு கண்துடைப்பே. உண்மை என்னவென்றால் மத்தியில் பாஜக மின்சாரத் துறையை முழுமையாக தனியார் மயமாக்க மின்சார மசோதா 2020 ஐ பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முயற்சிக்கிறது. அம்மசோதாவை எதிர்ப்பதாக கூறும் திமுக தமிழகத்தில் மின்சார கட்டணத்தை மக்களால் தாங்கிக் கொள்ள இயலாத அளவிற்கு உயர்த்துகிறது.

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

### பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

# தோழர் சிப்தாஸ் கோஷின்

## பிறந்த நூற்றாண்டு அனுசரிப்பு




தேனி




சேலம்



மதுரை




சென்னை

## அக்னிபாத் திட்டத்தை எதிர்த்து எஸ்கேஎம் நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்




– புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏஐகேகேஎம்எஸ் பங்கேற்பு

**சென்னை, மதுரை, சேலம் மாவட்டங்களிலும் ஏஐகேகேஎம்எஸ் பங்கேற்பு**

## மக்கள் விரோத மின்சார கட்டண உயர்வு . . .

*7ம் பக்கத் தொடர்ச்சி*

மேலும் ஒரு விஷயத்தை நாம் மறந்து விடக்கூடாது. திமுகவும் அதிமுகவும் ஆட்சியில் இருக்கும் போது விலையை ஏற்றுவது இல்லாத போது கட்டண உயர்வை கடுமையாக விமர்சித்து போராட்டத்தில் இறங்குவது என்பது மக்களை ஏமாற்றுவதற்காகத்தானாகும். பாஜக எதிர்க் கட்சியாக இருந்த போது எதையெல்லாம் எதிர்த்ததோ அதையே மத்தியில் ஆட்சிக்கு வந்தவுடன் பலமடங்கு வேகத்துடன் அமுல் படுத்துவதை மக்கள் பார்த்து வருகின்றனர். இக்கட்சிகள் அனைத்துமே முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளே. அவ்வகையில்தான் அதிமுக உள்பட பல கட்சிகள் மின்கட்டண உயர்வை எதிர்த்துக் கூக்குரலிடுவதாகும்.

### மின்சாரம் மனித சமுதாயத்தின் தேவை

மின்சாரம் மனிதனின் அன்றாட வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து விட்ட ஒன்றாகும். மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையும் ஆகும். ஆகையால் இது கல்வி மருத்துவம் போன்ற சேவையாக பார்க்கப்பட வேண்டுமே அன்றி லாப நஷ்ட கணக்கைப் பார்க்க கூடாது. மின்சாரத் துறையில் நஷ்டம் இல்லை என்பதுவே உண்மை. ஒருவேளை நஷ்டம் ஏற்பட்டாலும் அரசு அதை பொறுப்பேற்க வேண்டுமே அன்றி லாபகரத் தொழிலாகப் பார்க்க கூடாது என்பதுவே சரியான அணுகுமுறையாகும்.

இச் சூழ்நிலையில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து திமுக அரசாங்கத்தின் நியாயமற்ற மிக மோசமான மக்கள் விரோத சிறு குறு தொழில் விரோத மின்கட்டண உயர்வை எதிர்த்துப் போராட வேண்டும். மேலும் ஜனநாயக எண்ணம் கொண்ட அனைவரும் இப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறைகூவல் விடுக்கிறது ■

## ஏழைகளின் உணவுப் பொருட்களுக்கு ஜிஎஸ்டி வரி விதிக்கும் பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கத்திற்கு கடும் கண்டனம்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 19.07.2022 அன்று வெளியிட்ட அறிக்கை:*

75வது சுதந்திர தினப் பெருவிழா கொண்டாடப்படும் இந்நேரத்தில் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விண்ணை முட்டும் விலைவாசி உயர்வால் ஏற்கனவே அரைஜான் வயிற்றிற்கே அல்லற்படும் கோடிக்கணக்கான பாடுபடும் ஏழைகளுக்கு பாஜக அரசாங்கம் தாக்குதல்மேல் தாக்குதல் தொடுத்து வருகிறது. அதில் ஒன்று, பைகளில் அடைக்கப்பட்ட அரிசி, பருப்பு, பால், பால்பொருட்கள், பைகளில் அடைக்கப்பட்ட தயிர், லஸ்ஸி, வெண்ணெய் போன்ற பொருட்களுக்கு 5% ஜிஎஸ்டி வரி என்ற பெயரில் கொடூர வரிவிதிப்பை ஜூலை 18, 2022 முதல் மத்திய அரசாங்கம் அமல்படுத்தியுள்ளது. ஒரேயடியாக இந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் கிட்டத்தட்ட 10% அதிகரித்துவிட்டது. பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டு நிதிப் பற்றாக்குறையை குறைக்கப் போகிறேன் எனப் பேசிக்கொண்டிருக்கும் பாஜக நிதியமைச்சருக்கு இது ஒருவேளை பெருமை படக்கூடிய விஷயமாக இருக்கலாம். இது 55 லட்சம் கோடிகளை வைத்திருக்கும் 142 கோடீஸ்வரர்களுக்கும், ஒருமணி நேரத்தில் ரூபாய் 75 கோடிகள் முதல் 90 கோடிகள்வரை தொடர்ந்து லாபத்தைக் குவித்துக் கொண்டி ருக்கும் பகாசுர நிறுவனங்களுக்கு வரி ஏதும் போடாமல் விட்டுவிட்டு உண்மையில் ஓட்டாண்டிகளாயிருக்கும் மக்கள் மீது வரிகளைப் போட்டு அவர்களை மேலும் மேலும் கசக்கிப் பிழிவதன்றி வேறொன்றுமில்லை. இப்படித்தான் ஆளும் பாஜக, அனைவருக்குமான வளர்ச்சியை உத்தரவாதப்படுத்துகிறோம் எனக் கூறிக்கொண்டு, ஜிஎஸ்டி வரிவிதிப்பானது விலைவாசியைக் குறைக்கும் என வாக்குறுதி தந்து, அப்பட்டமாக மக்களை ஏமாற்றி வருகிறது.

நம்பிக்கைகுரிய மேலாளராக பாஜக சேவை புரிந்து கொண்டிருக்கும் நெருக்கடி பீடித்து மரணத்தருவாயில் இருக்கும் முதலாளித்துவ மானது, அதிகரித்துவரும் ஒடுக்குமுறை, ஏமாற்று, வறுமை, பாகுபாடு மற்றும் அடக்குமுறை தவிர வேறெதையும் நாட்டு மக்களுக்கு வழங்க முடியாது என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்தி கூறுகிறோம். பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்கள் தங்களின் தயக்கங்கள், ஊசலாட்டங்கள் அனைத்தையும் விட்டொழித்து தங்களை ஒருங்கிணைத்துக்கொண்டு, போராட்ட ஒற்றுமையை பலப்படுத்திக்கொண்டு, இந்த கொடுங்கோல் சுரண்டல் முதலாளித்துவ அமைப்பு மற்றும் அதன் அடிவருடிகளை எதிர்த்த சக்திவாய்ந்த ஒருங்கிணைக்கப்பட்ட நீண்டநெடிய இயக்கத்தை கட்டவிழ்த்து விடாவிட்டால், ஆளும் அதிகாரவர்க்கமானது அதன் ஈவிரக்கமற்ற அடக்குமுறை இயந்திரத்தை தொடர்ந்து இயக்கிக்கொண்டு மக்கள் வாழ்வில் மேலும் துயரத்தை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும் ■

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094,* ***ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***
Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**